# புத்தத்தன்மை*

தியானப்பிரபஞ்சம்" இதழிலிருந்து



புத்தத்தன்மையைப் பற்றி கௌதம புத்தர் பேசுகையில், அதன் சாராம்சத்தை மிகவும் அழகாகக் கூறுகிறார். புத்தத்தன்மையின் உயரம், அதன் ஆழம், அடையக்கூடிய புகழ், வளரும் கருணை, அவை வழங்கும் பிரம்மாண்டமான சுதந்திரம், அன்பு, மகிழ்ச்சி, பேரின்பம் விழிப்புணர்வு.
இந்த சூத்திரங்கள் மிகவும் அரிதானது. அரிதிலும் அரிதான சூத்திரங்கள் ... ஏனென்றால் புத்தர் தனது இதயத்தையே உங்களிடம் திறந்து காட்டுகிறார். அவர், "தனது மையப் பகுதிக்கே நீங்கள் வாருங்கள்" என்று உங்களுக்கு அழைப்பு விடுக்கிறார். புத்தத் தன்மையின் வாசனையைக் கூறுகிறார். ஏனென்றால் ஒவ்வொரு மனிதரும் புத்தத் தன்மையை அடையவே பிறப்பெடுக்கிறார்கள்.
அவர் விழிப்படைந்தார். அவர் விழிப்படைந்தார் என்பதே மிகவும் முக்கியத்துவமான பண்பு. அவர் இனிமேல் கற்பனையிலும், கனவிலும் இருக்கப் போவதில்லை. இவருக்கு எந்த சிந்தனையும் இல்லை, எந்த நினைவும் இல்லை.

அவர் முழுமையான அமைதியிலும் விழிப்பு நிலையில் இருக்கிறார். அவர் மிகுந்த அமைதியுடன் இருந்தாலும் அவர் உயிர் ஒன்றும் போகவில்லை. அது ஒரு ரம்மியமான அமைதி, அந்த அமைதி ஒரு விழிப்புடனும், உயிர்ப்புடனும் இருந்தது.
வெற்றி அவருடையது. அவர் இந்த உலகையே வென்று விட்டார்.
புத்தர் கூறுகிறார்: "ஒருவர் விழிப்படைந்தால் மட்டுமே உலகை வென்றவர் ஆகிறார், நாடுகளை பிடித்தால் இல்லை. ஒருவர் தனது தன்னுணர்வற்ற நிலையை வென்றாக வேண்டும். அதுவே வெற்றி."
இந்த உலகில் மொத்தம் இரண்டு வகையான மனிதர்களே உள்ளனர். ஒன்று அலெக்சாண்டர் தி கிரேட் போன்ற மனிதர்கள், மற்றொன்று புத்தரைப் போன்ற மனிதர்கள்.
கொடிக்கணக்கான பேர் உள்ளனர். இன்னும் சொல்லப்போனால் உலகில் 99.9% மனிதர்கள் அலெக்சாண்டர் போன்றவர்களே. சின்ன அலெக்சாண்டர், பெரிய அலெக்சாண்டர். ஆனால் அனைவரும் அலெக்சாண்டர்களே.
ஒவ்வொருவரும் இந்த உலகை தன் வசப்படுத்த முயற்சி செய்கிறார்கள்...

அது பணத்தாலோ, பதவியாலோ, அல்லது தனது கௌரவத்திற்காகவோ அனைவரும் மிக ஆழமான ஆசைகளை உள்ளடக்கிக்கொண்டு, இந்த உலகை ஒருநாள் வென்றே தீருவோம் என்ற முனைப்புடன் வாழ்கிறார்கள்.
மேலும், இந்த உலகில் புத்தராக இருப்பவர்கள் எண்ணிக்கை மிகவும் சொற்பமான அளவே உள்ளது. இவர்களுக்கு இந்த உலகியல் வாழ்வில் எந்த விருப்பமும் இருக்காது. இவர்களின் முழு ஈடுபாடும் சுயமயமாகுதல், தன் உணர்வுடன் இருத்தல், சத்தியத்தை நோக்கிய பயணம் போன்றவற்றில் மட்டுமே ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

அவர் விழிப்படைந்தார் .. வெற்றி அவருடையது.

புத்தர் கூறுகிறார்: "இந்த உலகை வென்றவர்கள் ஒன்றும் வெற்றியாளர்கள் இல்லை. தன்னை வென்றவர்களே வெற்றியாளர்கள். தன்னை வென்றவர்கள் மறைமுகமாக உலகை வென்றவர்கள் ஆகிறார்கள். பின்னர் இவரும் குரு ஆகிறார்.

எவ்வாறு இவர் பாதையை இழக்க முடியும்? இவர் பாதையை கடந்தவராயிற்றே.
இவர் கண்கள் திறந்திருக்கும்.
இவரது கால்கள் விடுதலை பெற்றுள்ளது.
யார் இவர் பின்னால் செல்ல முடியும் இப்போது...?
இவர் எப்படி பாதையை தொலைத்தவராவார் ...
இவர் பாதைக்கு கடந்தவராவார்.
நீங்கள் முழுமையாக விழிப்படைந்துவிட்டீர்கள் என்றால் நீங்கள் பழைய பாதைகளில் இருந்தும், பழமையான பழக்க வழக்கங்களில் இருந்தும் தானே விடுபட்டு விடுவீர்கள்.
இதுவே புத்த நிலை. இந்த நிலைக்குச் சென்ற பிறகு அங்கிருந்து யாரும் கீழே விழுந்து விட முடியாது. ஏனென்றால் அதுவே உங்கள் இயற்கையான இயல்பு. ஒரு தடவை நீங்கள் இதை உணர்ந்து விட்டால் பிறகு அதிலிருந்து உங்களால் கீழே வரவே முடியாது. நீங்களே அதிலிருந்து வெளியே வர முற்பட்டாலும் முடியாது...

"இவர் கண் விழித்திருக்கிறது"...
ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள், புத்தர், 'என் கண்கள் திறந்து உள்ளது' என்று கூறவில்லை... 'தனது கண் விழித்துள்ளது' என்றே கூறுகிறார்... வெளியில் உள்ள இரண்டு கண்கள் வெளி உலகத்தைக் காண்பதற்கு மட்டுமே. இந்த உலகில் உள்ள அனைத்தும் இரட்டைத் தன்மை கொண்டது. ஆனால், நம் உள்ளே காண்பதற்கு ஒற்றைக் கண் ஒன்று உள்ளது. உங்களது இரண்டு கண்கள் கொண்டு நீங்கள் உள்ளே காண பயிற்சி செய்ததால் இரண்டு ஒன்றானது. அதனால், மூன்றாம் கண் என்ற ஒரு யோசனை வருகிறது. மூன்றாம் கண் என்பது ஒரு மனோதத்துவ யோசனையே ... ஆனால், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு உருவகம் ( மெட்டபோர் என்று ஆங்கிலத்தில் கூறலாம் ). நீங்கள் உங்கள் தலைக்குள் ஸ்கேன் செய்து பார்த்தால் மூன்றாம் கண்ணைக் காண முடியாது. இரண்டு கண்களின் ஒளிகள் உள்ளே ஒன்றாகும் ஒற்றை இடம். அதனால், புத்தர் கூறுகிறார்: 'அவர் கண் விழித்துள்ளது' என்று. 'கண்கள்' இல்லை 'கண்'. அதனைக் கொண்டு அவரால் உள்ளே காண முடியும்.
நீங்கள் புத்தரைப் பின்தொடர முடியாது. அவரைப் புரிந்து கொள்ள முடியும். அவரிடம் இருந்து ஏராளமாகக் கற்றுக் கொள்ள முடியும். ஆனால், அவரைப் பின்தொடர முடியாது. உங்களுக்குள் ஒரு லட்சியம் இன்றி அவரைப் பின்தொடர முடியாது. வெறுமனே நீங்கள் 'அவரை நம்புகிறேன்' என்று கூற முடியாது.

புத்தர் கூறினார்: பௌத்தர்கள் வழிகளைக் காண்பிக்கத்தான் முடியும். ஆனால், நீங்களே முயற்சி செய்தால்தான் அந்த வழியில் பயணம் செய்ய முடியும். வேறு யாரும் உங்களுக்காக நடக்க முடியாது, பார்க்க முடியாது. நீங்களாக மட்டுமே உங்கள் உள்ளிருப்பைக் காண முடியும்.
ஆனால், நீங்கள் புத்தருடன் இருக்கையில் ஏராளமாகக் கற்றுக் கொள்வீர்கள். உங்களால் அவரது சக்தியை கிரகிக்க முடியும், அதிர்வுடன் இருக்க முடியும். மேலும், உன்னத அமைதியில் இருக்க முடியும். அதுவே உங்கள் தன்மை மாற்றம்.
"இந்த உலகத்தால் அவரை இனி மாற்ற முடியாது".
"அவரை வழிதவறச் செய்ய முடியாது".
"ஆசை என்னும் விஷத்தையும் அவர்கள் செலுத்த முடியாது".
உங்களுக்கு உள்விழிப்பு ஒருமுறை வந்துவிட்டால், சில விஷயங்களை உங்களால் செய்ய முடியாது.
"இந்த உலகத்தால் அவரை இனி மாற்ற முடியாது".
ஒருவர் புத்தர் ஆகிவிட்டால், இந்த உலகில் உள்ள எந்த கவர்ச்சியையும், மயக்கங்களையும் கொண்டு அவரை வசப்படுத்த முடியாது. அவர் மையத்திலேயே இருப்பார். கவனச் சிதறல் என்பது நாம் தூக்கத்தில் இருக்கும்போதுதான் நடக்கும்.

மக்கள் மாற மாட்டார்கள்:
மிகவும் தன்னுணர்வு இல்லாத நிலையில் இருப்பதால்தான் ஆசைகள், ஏக்கங்கள், கோபம், பேராசை, பாலியல் உணர்வு எல்லாம் இருந்துகொண்டே இருக்கிறது. மேலோட்டமாகப் பார்த்தால் மக்கள் மாறியது போலவே தெரியும். ஆனால், அவர்களின் ஆழ்மனதில் மாற்றம் இருக்காது. உங்கள் குணத்தை மாற்றி விட்டால் உணர்வு நிலையில் மாற்றம் வந்து விடாது. மாறாக உங்கள் உணர்வு நிலையில் மாற்றம் கொண்டு வாருங்கள். பிறகு உங்கள் குணம் தானாக மாறும். அதுவே புத்தரின் வழி, அதுவே எனது வழியும்கூட. நீங்கள் தூக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்குச் செல்ல சாவியை உங்களிடம் கொடுக்கிறேன். அதுதான் உண்மையாகச் செய்ய வேண்டும். பிறகு நீங்கள் விழிப்படையத் தொடங்கும்போது உங்கள் உறக்கம் காணாமல் போகும். உங்கள் உறக்கம் செல்ல, செல்ல அதன் பாகங்களான கோபம், பேராசை, பிரம்மை, பொறாமை இவைகளெல்லாம் தானாக காணாமல் போகும். கடவுள்கள் இவரை கவனித்துக் கொண்டே இருப்பார்கள். விழிப்படைந்தவரிடம் இயற்கை முழுமையடைகிறது. பிரபஞ்சத்தின் இலக்கே இவரைப்போன்றவர்கள்தான். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் புத்தகத்தன்மையை நோக்கிச் செல்கிறது. அதனால், ஒரு மனிதன் விழிப்படைந்தால் மகிழ்ச்சி அலையாற்றல், பிரபஞ்சம் முழுவதும் பரவும், மகிழ்ச்சி களிப்படையும். ஆனந்தத் தாண்டவமாடும்.

இவர் விழிப்படைந்தார்...
இவர் தியானம் செய்வதால் கிடைக்கும் அமைதியை மகிழ்வாக அனுபவிப்பார்...
மீண்டும் மீண்டும் புத்தர் கூறுகிறார்: 'அவர் விழிப்படைந்தார்' என்று... ஏனென்றால் அதுதான் முக்கியமான தன்மை. மீதியெல்லாம் அதனைப் பின்தொடரும்...
புத்தர் 'அவர் விழிப்படைந்தார்' என்று கூறுகையில்: அதன் பொருள், அவர் மீதே கவனம் அதிகரித்துள்ளது, அவர் உட்புறமாக பயணிக்கத் தொடங்கியுள்ளார் என்பதாகும். அவரது முழு விழிப்புணர்வையும் அவர் மீதே செலுத்துகிறார். அதில் அவர் புதுமையாகிறார், மறுபிறவி எடுக்கிறார்.
மற்றும் தியானத்தின் அமைதியில் மகிழ்ச்சி அடைகிறார்... தியானத்தின் பொருள் கிழக்கிற்கும்,மேற்கிற்கும் நிறைய வேறுபடும். மேற்கில், தியானம் என்பது ஒரு சிந்தனையே: கடவுள் மீது தியானம், உண்மை மீது தியானம், அன்பின் மீது தியானம். கிழக்கின் சிந்தனைப்படி : எதையும் மனதில் சிந்திக்கத் தேவையில்லை. சிந்தனையற்ற நிலைக்குச் செல்வதே உசிதம். எந்த விஷயமும் உள்ளே இருக்கத் தேவையில்லை. தியானம் என்பது, நம்முள் இருக்கும் சிந்தனைகளை காலி செய்வதாகும். நமது மனதில் சிந்தனை நிலையில் மாபெரும் அமைதி நிலையை அடைவோம். ஒரு சிறு அலை வந்தாலும், உங்கள் உணர்வு நிலையில் எந்த மாற்றமும் ஏற்படாது. அந்த அமைதியான ஏரி, மிகுந்த அமைதி, அதுவே தியானம்.

சரணடைதலின் இனிமையில் ... தியானம் செய்கையில் சரணாகதி ஏற்படும்... இந்த முழுமைக்குள் சரணாகதி உண்டாகும். எந்த யோசனைக்கும், எந்த சிலைக்குள்ளும் சரணடைய மாட்டோம். கிருஷ்ணரிடத்திலோ அல்லது ஜீசஸிடத்திலோ சரணடைய மாட்டோம். ஆனால், இந்த முழுமையிடத்தில் சரணடைவோம். எதுவும் விடுபட்டுப்போகாத முழுமையில் சரணடைவோம்.

வாழ்க்கை கடினமானது ... வாழ்க்கை சுலபமில்லை. அது ஒரு மயக்க நிலை. எப்படி நம்மால் எளிதாக வாழ முடியும்? நீங்களே உங்களுக்குப் பிரச்சனைகளை உருவாக்கிக் கொள்வீர்கள். நீங்கள் விழுந்துகொள்ள நீங்களாகவே குழி தோண்டுவீர்கள். உங்களைச் சுற்றி நீங்களே சுவர் எழுப்பிக் கொள்கிறீர்கள். நீங்களே உங்கள் எதிரி.

வாழ்க்கை கடினமானது. அதைவிட கடினமானது, சில மேலானவர்களின் வழிகளைக் கேட்டறிவது: புத்தர் போன்றோரைத் தேடுவது, ஒரு மாஸ்டர் ... ஒரு சரதுச ( Zarathustra) கிறிஸ்து, மற்றும் லாவோ ஜூ. ஒரு புத்தரைத் தேடுவது மிகவும் கடினமான செயல் நமக்கு. அதைவிட அவர் என்ன சொல்கிறார் என்று புரிந்து கொள்வது மிகவும் கடினமாக இருக்கும்.

நீங்கள் ஒரு புத்தரை கண்டு கொண்டீர்கள் என்றால் அவரிடம் சரணடைய வேண்டும். இல்லையெனில் அது வீணானது. ஒரு புத்தரை கண்டு கொண்ட பிறகு அவரிடம் சரணாகதியாவது ஒரு இயற்கையான நிகழ்வு. பின் தொடர, விழிப்படைய, மேலும் உயர்வடைய கடினமாக இருக்கும்...
மிகவும் கடினமான விஷயம் என்னவென்றால் ... புத்தர் கூறுவதை நாம் கேட்பதால் மட்டும் நாம் அவர் உயரம் தொட்டுவிட முடியாது. ஏனென்றால் நாம் புத்தர் ஆகாமல் புத்தரைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். புத்தரைப் புரிந்துகொள்ள புத்தராவதே வழி.
கற்றல் எளிதானதே...
என்னதான் உண்மைகளைக் காண, கற்க, புரிந்து கொள்ள கடினமானதாக இருந்தாலும், அவைகளை கற்பது மிகவும் சுலபமே. மனதில் மாற்றமே முக்கியமானது. உண்மை என்றும் எளிதானதே. குருவின் கற்பித்தலை முழுமையாக ஏற்க தயார் நிலையில் இருங்கள்.
எது சரியானதோ அதைச் செய்யுங்கள்.

விழிப்போடு எதைச் செய்கிறீர்களோ அதுவே சரியானது என்று புத்தர் கூறுகிறார். எது சரியோ அதைச் செய்யுங்கள், தூய்மையாக இருங்கள் ... தூய்மை என்றால் நமது திறந்த நிலை என்கிறார் புத்தர். ஒரு குழந்தையை போன்ற நிலை. புத்தர் கிறிஸ்துவுடன் ஒத்துப் போகிறார்: " நீங்கள் குழந்தையாக மாறவில்லையெனில் இறைவனுடன் கலக்க முடியாது" என்கிறார் ஜீசஸ். உங்களது சேகரித்த அறிவுகளை விட்டு விடுங்கள்... திறந்த நிலையில் இருங்கள். பாதையின் கடைசியில் நீங்கள் சுதந்திரமாவீர்கள். நீங்கள் விழிப்பு நிலையில் இருங்கள், சரியானதைச் செய்யுங்கள், மற்றும் பிறந்த நிலையில் இருக்க முயற்சித்தீர்கள் என்றால் தியான நிலைக்குச் செல்வீர்கள். இறுதியில் சுதந்திரம் அடைவீர்கள். நிர்வாணம் என்பதே அதன் பொருள். அங்கு ஆணவம் இருக்காது. அதுவே கடவுள் நிலை.

அதுவரை பொறுத்திருங்கள்.

நிர்வாண நிலை உடனே வந்து விடாது. கொஞ்சம் காலம் பிடிக்கும். அதுவரை பொறுத்திருங்கள். புத்தர் கூறுகிறார்: எது சரியானதோ அதைச் செய்யுங்கள். அதாவது முழு விழிப்புணர்வோடு செய்யுங்கள். தூய்மையாக இருங்கள். பொறுமையாக இருங்கள். வேகமாக இருக்காதீர்கள்.

இறுதியில் நீங்கள் சுதந்திரம் அடைவீர்கள் ... அது விழிப்புணர்வின் துணை நிலையாகும்.

/ முற்றும் /

இந்தத் தகவல்கள் ஓசோ எழுதிய 'தி தம்மப்பதா:புத்தரின் வழி', வோல்6(vol) என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

ஆதாரம்: ஸ்பிரிசுவல் சயின்ஸ்

தமிழாக்கம்: டாக்டர். ஆர். ரவிக்குமார் ஈரோடு

( 'தியானப்பிரபஞ்சம்' இதழிலிருந்து)